வள்ளுவர் கோட்டத்தினைப் புனரமைக்கும் பணி எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

18-9-1973 அன்று வள்ளுவர் கோட்டம் கட்டுவதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 1976 ஆம் ஆண்டு அப்பணிகள் முடிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது. அது ஏறத்தாழ 5 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. திராவிட கட்டடக் கலையையும், பல்லவக் கட்டடக் கலையையும் இணைத்து கட்டப்பட்டதுதான் வள்ளுவர் கோட்டம். திருவாரூர் ஆழித்தேரை, மாதிரி வடிவமாகக் கொண்டு, கல்தேர், கலைச் சிற்பம் உள்ளிட்ட வேலைப்பாடுகளுடன் வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டது. அது 128 அடி உயரம் கொண்டது. 1977-ல் அரங்கத்தினுடைய நடுவில் எந்தத் தூணும் குறுக்கிடாதபடி 67 மீட்டர் நீளமும், 31 மீட்டர் அகலமும் கொண்ட, 4,000 பேர் அமரக்கூடிய வகையில் பிரம்மாண்டமான அரங்கம் அமைக்கப்பட்டது. வள்ளுவர் கோட்டம் சென்னை நகரத்தின் மையப் பகுதியில் சிறப்பாக அமைந்துள்ளது. அது 10 ஆண்டு காலம் பாராமுகமாகப் பாழ்பட்டு கிடந்த நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே, அதற்கு முக்கியத்துவம் தந்து, அதைச் சீரமைக்க வேண்டும், புனரமைக்க வேண்டும் என்று எங்கள் துறைக்கு ஆணை பிறப்பித்தார்கள். அந்த வகையில், அரசாணை எண் 116, நாள் 13-7-2023-ன் வாயிலாக ரூ.80 கோடி மதிப்பீட்டில் வள்ளுவர் கோட்டத்தை தற்போதுள்ள நவீன technology-ஐப் பயன்படுத்தி, புனரமைக்கவும், எப்போதும் பார்வையாளர்கள் வந்து பார்ப்பதற்கும், பொதுவான காரியங்களுக்குப் பயன்படுத்துவற்கும் கூட்டரங்கத்தினைப் பயன்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டார்கள். மேலும், கலையரங்கம் மற்றும் குறள்மாட கூரை புனரமைத்தல், தரை புதுப்பித்தல், தூண்கள் மற்றும் நுழைவாயில் பகுதிகளில் சிறப்பு வேலைப்பாடுகள் செய்தல், மாற்றுத்திறனாளிகளுக்கு நடைபாதை ஏற்படுத்துதல், உணவுக்கூடம், விற்பனை மையம் மற்றும் மழை நீர் வடிகால் வசதிகள் ஏற்படுத்துதல், 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவுகொண்ட நீர் சேமிப்புத் தொட்டி அமைத்தல், செயற்கை நீரூற்று அமைத்தல், ஒலி-ஒளி காட்சிகள் அமைத்தல், கூட்டரங்கம் மற்றும் குறள்

2024 பிப்ரவரி 22]

மாடத்தில் குளிர்சாதன வசதியை முழுமையாக ஏற்படுத்துதல், தீத்தடுப்பு வசதிகள் செய்தல், நுழைவாயில் புதுப்பித்தல், உயர் மின்னழுத்த, HT line *இணைப்பு கொடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு, வள்ளுவர் கோட்டத்தை எப்போதும் மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதன் அடிப்படையில், அப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்பணிகள் 30-6-2025 அன்று முடிக்கப்பட வேண்டும். எனினும், இரவு, பகல் பாராது 2* shifts-*ல் பணியாளர்கள் வேலை செய்வதால், குறிப்பிட்ட காலகட்டத்திற்கு முன்பாகவே அப்பணிகளெல்லாம் நிறைவு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் வள்ளுவர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டு வரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முத்தமிழறிஞருடைய இரவு நேர மருத்துவர். அவருடைய சமூக நீதிக் கொள்கையால் மருத்துவம் பயின்று, அவருக்கு சிகிச்சையளிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது என் வாழ்நாள் பெருமிதமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இரவு பாடசாலையில் அவர் எனக்கு பரிசாகக் கொடுத்த பல புத்தகங்களுள் ஓர் அரிய புத்தகம்* Socio-political philosophy of Thiruvalluvar *என்பதாகும். இந்தப் புத்தகத்தைப் படித்தால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வள்ளுவத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டை ஆட்சி செய்துள்ளார் என்ற உண்மை தெரியவரும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம், திராவிடத் தத்துவத்திற்கும், வள்ளுவத்திற்கும் மையப்புள்ளி முத்தமிழறிஞர் கலைஞர் ஆவார்.*

பெரும் தலைவர்களின் சிந்தனைப் பொறியில் ஏற்படும் பல திட்டங்கள் சமூகத்திற்குப் பயன்படும். அந்த வகையில், காலையில் ஒரு சிறிய குழந்தை பட்டினியோடு பள்ளிக்கூடம் வந்தபோது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வின்போது, "ஏம்மா சோகமாக இருக்கிறாய்?" என்று கேட்ட கேள்வியால்தான் தற்போது முதலமைச்சர் காலை சிற்றுண்டித் திட்டம் உதித்துள்ளது. தற்போது 18 இலட்சம் குழந்தைகள் இதனால் பயன்பெறுகிறார்கள்.

இதனால், தலைமுறை தலைமுறையாக குழந்தைகளுக்கு ஏற்பட்ட ஊட்டச்சத்து குறைபாடு நீக்கப்படும்; குழந்தைகளின் அறிவுத் தன்மையும் மேம்படும்; அதுதான் ஒரு தலைவரின் சிந்தனைப் பொறி.

அதேபோன்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு வள்ளுவர் கோட்டத்தைக் கட்ட வேண்டும் என்ற சிந்தனைப் பொறி எந்த மாநிலத்திற்குச் சென்றபோது ஏற்பட்டது என்றால், அது பஞ்சாப் மாநிலத்திற்குச் சென்றபோது உருவாயிற்று. அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், 1971 ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்திற்கு ஏன் சென்றார் என்றால், தமிழக விவசாயத்தை நவீனப்படுத்த வேண்டும் என்ற நினைப்போடு சென்றார். பஞ்சாபிலுள்ள வேளாண் பல்கலைக்கழகத்தைப் போன்று தமிழ்நாட்டில் ஒரு வேளாண் பல்கலைக்கழகம் உருவெடுக்க வேண்டும் என்ற அவரது சிந்தனைப் பொறியால் உதித்ததுதான் கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–15

அப்போது சீக்கியர்களுடைய புனிதக் கோயிலுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் செல்கிறார். சீக்கியர்களுடைய புனிதக் கோயிலுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் செல்லும்போது, அங்கே குருநானக்கின் போதனைகளைப் பார்க்கிறார்; வழிப்பாட்டைப் பார்க்கிறார். அங்கே மனுதர்மம் கிடையாது; மனு சாஸ்திரம் கிடையாது; அங்கே சமத்துவ நெறி இருக்கிறது. புனிதக் கோயிலின் மையப் பகுதிக்குச் செல்கிறார். அந்த மையப் பகுதியில். . . (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) வள்ளுவரைப் பற்றி பேசுகிறேன். அதனைக் கேளுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வராஜ், உட்கார்ந்து கொண்டே பேச வேண்டாம். தத்துவங்களைச் சொல்கிறார்; வள்ளுவரைப் பற்றி சொல்கிறார். அதில் ஒன்றும் தவறில்லை. நல்ல விஷயம் தானே! (குறுக்கீடு) தங்களுக்கு இன்னொரு கேள்வி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள் என்னைப் பார்த்து பேசவும். கேள்விக்கு வாருங்கள். இன்னொரு கேள்விக்கு வாய்ப்புத் தருகிறேன்.

2024 பிப்ரவரி 22]

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மையப் பகுதியில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், வள்ளுவருக்கு வாருங்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *வள்ளுவருக்குத்தான் வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையின் மையப் பகுதியில், வள்ளுவர் கோட்டத்தை அமைக்க முடிவெடுத்து, இன்று ஆயிரம் விளக்கு தொகுதியில் குப்பைக் கூளமாக இருந்த பகுதியில் வள்ளுவர் கோட்டத்தைக் கட்டி எழுப்பியவர் முத்தமிழறிஞர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால், மேல் தளத்தில் கணபதி ஸ்தபதி அவர்கள் உருவாக்கிய சிலையை வைத்து அதனை ஒரு கருவறைபோல் உருவாக்கி, கருவறைக்குள் யாரும் செல்லக்கூடாது என்ற ஆகம விதியை அகற்றி, அனைவரும் செல்லலாம் என்ற நிலையை உருவாக்கிய வள்ளுவர் கோட்டம்தான் கலைஞருடைய சிந்தனை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல், வள்ளுவர் கோட்டத்தில்,* International Research Centre for Valluvar Studies *என்ற அமைப்பு உருவாக்கப்படுமா என்பதைத் தாங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய சிற்பி கலைஞர் என்பதற்கு பல்வேறு அடையாளங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பட்டியலிட்டு, அவருடைய கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, வருங்காலங்களில் அதனை நிறைவேற்ற இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*